www.Padasalai.Net

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் மாநில அளவில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திட இரண்டு இணை இயக்குநர் பணியிடங்கள் அனுமதித்தல் — ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை**

**அரசாணை (நிலை) எண்.140** **நாள்: 21.06.2024**

**திருவள்ளுவர் ஆண்டு 2055**
**குரோதி வருடம், ஆனி - 7**

**படிக்கப்பட்டவை :**

1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (அகஇ2)த் துறை, நாள் 16.05.2018.
2. அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக் கல்வி (பக1(1))த் துறை, நாள் 09.09.2022.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.033218/ அ1/இ1/2023, நாள் 12.06.2023, 25.10.2023 மற்றும் 03.06.2024.
4. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கடித ந.க. எண். 2179/அ1/ பணி/ஒபக/2023, நாள் 09.06.2023.

-------------

**ஆணை :-**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் 2001-2002-ஆம் ஆண்டு முதல் அனைவருக்கும் கல்வி இயக்கக மாநில திட்ட அலுவலகத்தில் இரு இணை இயக்குநர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு பல்வேறு திட்டக் கூறுகளை சிறப்பாக நடைமுறைப்படுத்தி தமிழ்நாட்டில் அனைவருக்கும் கல்வி திட்ட செயல்பாடுகள் திறம்பட செயல்படுத்தப்பட்டது எனவும், ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள அனைத்துப் பள்ளிகள், ஆசிரியர்கள்

www.Padasalai.Net



மற்றும் மாணவர்களின் முன்னேற்றம் சார்ந்த பல்வேறு செயல்திட்டங்கள் அனைவருக்கும் கல்வி இயக்ககம் மூலம் செயல்படுத்தப்பட்டது எனவும், 2018-ஆம் ஆண்டு அனைவருக்கும் கல்வி இயக்கம், ஆசிரியர் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி திட்டம் ஆகிய மூன்று திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டமாக உருவாக்கப்பட்ட போது இடைநிலைக் கல்வி திட்டத்திற்கு 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான முன்னேற்ற செயல்திட்டங்களை செயல்படுத்த அனுமதிக்கப்பட்ட ஒரு இணை இயக்குநர் பணியிடமும், அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட இரண்டு இணை இயக்குநர் பணியிடங்களும் ஆக மொத்தம் மூன்று இணை இயக்குநர் பணியிடங்கள் அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி(அகஇ2)த் துறை, நாள் 16.05.2018-இன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக் கல்வி (ப.க.1(1))த் துறை, நாள் 09.09.2022-இன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நிருவாக மறுசீரமைப்பில் இரு இணை இயக்குநர் பணியிடங்கள் முறையே மாநில ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன இயக்ககத்திற்கும், தனியார் பள்ளிகள் இயக்ககத்திற்கும் மாற்றம் செய்யப்பட்டது எனவும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலே, நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்ககத்திலிருந்து மாற்றப்பட்ட பணியிடங்கள் மூலம் இன்றைய சூழலில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளான நம்ம ஊரு நம்ம பள்ளி, உயர்கல்வி வழிகாட்டுதல், நான் முதல்வன் திட்டம், மாதிரிப் பள்ளிகள், வானவில் மன்றம், கலை மற்றும் பண்பாடு கலை அரங்கம், அனைத்து பள்ளிகளிலும் பாடம் சார்ந்த மற்றும் பாடம் சாராத மன்ற செயல்பாடுகள், சிறார் திரைப்படங்கள் போன்ற பல்வேறு சிறப்பு செயல்திட்டங்கள் ஆகிய புதிய முன்னெடுப்புகளை நடைமுறைப்படுத்தவும், மறு கட்டமைப்பு செய்யப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழு செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல், பள்ளி செல்லா குழந்தைகள் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை உருவாக்க எடுக்கப்படும் முயற்சிகளை செயல்படுத்துதல், அனைத்து செயல்திட்டங்களையும் கணினி மயமாக்குதல் வகுப்பறை நிகழ்வுகளை சீராக பள்ளி பார்வைக்கென உருவாக்கப்பட்ட செயலி மூலம் கண்காணித்து முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அடைவு ஆய்வு மற்றும் மதிப்பீடுகளை முறையாக மேற்கொள்ளுதல், பள்ளி

www.Padasalai.Net

கட்டிடங்கள் பராமரித்தல், கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை அனைத்து பள்ளிகளிலும் தேவைக்கேற்ப உள்ளதை உறுதி செய்தல், பள்ளிகளில் விளையாட்டு நிகழ்வுகளை ஊக்குவித்தல், பள்ளி நூலகங்களை வலுப்படுத்துதல், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு தேவையான ஒருங்கிணைந்த கற்றல் நிகழ்வுகளை வழங்குதல், குழந்தைகளின் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், தொழிற் கல்வியை ஊக்குவித்தல், மாணவர்களின் பாதுகாப்பு செயல்திட்டங்கள், பெண்களுக்கான தற்காப்பு கலைகள் போன்ற செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பணியாளர்களின் நிர்வாகம் நிதி தொடர்பான பல்வேறு பணிகள், எண்ணும் எழுத்தும் திட்டம், பெண் கல்வியை ஊக்குவிக்க பல்வேறு செயல்திட்டங்களை செயல்படுத்துதல், ஆண்டுதோறும் அனைத்து வகையான திட்டங்களை தொகுத்து ஆண்டு வரைவுத் திட்டங்களை மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தயாரித்தல், வரவு செலவுத் திட்டத்தினை நிர்வகித்தல் உள்ளிட்ட அனைத்து திட்டங்களையும் முன்பருவ கல்வி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பள்ளிகள், ஆசிரியர்கள், மாணவர்களின் நலன் கருதி சிறப்பாக செயல்படுத்த வேண்டிய நிலையில், அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக் கல்வி(ப.க,1(1))த் துறை, நாள் 09.09.2022-இல் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியில் இருந்து மாற்றப்பட்ட இரு இணை இயக்குநர் பணியிடங்களும் அவசியமாக தேவைப்படுகிறது எனவும், மேற்காண் பணியிடங்களை மீளவும் அனுமதிக்குமாறு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் மாநில அளவில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக 8 ஆசிரியர் பணியிடங்களை சரண் செய்து 2 இணை இயக்குநர் பணியிடங்களை (நிலை 28, ரூ.1,23,100 - ரூ.2,50,400) ஊதிய நிலையில் அனுமதித்து ஆணை வழங்கிடுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, இணைப்பில் கண்டுள்ள 8 ஆசிரியர் பணியிடங்களை சரண் செய்து, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் மாநில அளவில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திட இரண்டு இணை இயக்குநர் பணியிடங்களை (நிலை 28, ரூ.1,23,100-ரூ.2,50,400) ஊதிய நிலையில் அனுமதித்து ஆணையிடுகிறது.

 www.Padasalai.Net

5. சரண் செய்யப்படும் ஆசிரியர் பணியிடங்களின் விவரங்கள் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.4998/அகஇ2/2024, நாள் 13.06.2024 மற்றும் பணியிடப் பேரேட்டு எண்.202406PSL0088-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.குமரகுருபரன்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/ 35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.

**நகல்**

நிதி (கல்வி-II/ மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை – 9.
பள்ளிக் கல்வி (ப.க.1)த் துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

பிரிவு அலுவலர்.

www.Padasalai.Net

**இணைப்பு**

**அரசாணை (நிலை) எண்.140, பள்ளிக் கல்வி (அகஇ2)த் துறை, நாள்: 21.06.2024.**

**அரசுக்கு சரண் செய்யப்படும் ஆசிரியர் பணியிடங்களின் விவரம்**

| S. No. | District Name | School Name and Address | Old DDO Code | IFHRMS Code & Digit | Post with Position ID | UDISE No. | Post Sanctioned G.O. No. and Date |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Krishnagiri | GHS, Kamandoddi | SB588 | 30030102 | Bachelor of Teaching Assistant/ 419583 | 33311406502 | G.O.(Ms) No.958, Education Department, dated 22.08.1985 |
| 2. | Krishnagiri | GHS, Vennampalli | SB5K9 | 30040002 | Bachelor of Teaching Assistant/ 396803 | 33311214202 | G.O.(Ms) No.781, Education Department, dated 17.08.1993 |
| 3. | Krishnagiri | GHS, Andevanapalli | SB545 | 30020012 | Bachelor of Teaching Assistant/ Social Science/ Tamil / 535647 | 33311700503 | G.O.(Ms) No.825, Education Department, dated 19.05.1981 |
| 4. | Krishnagiri | GHS, D.Kothanur | SB536 | 30020033 | Bachelor of Teaching Assistant/ 446949 | 33311703602 | G.O.(Ms) No.142, Education Department, dated 09.07.1981 |
| 5. | Krishnagiri | GHSS, Keelkuppam | SB5H4 | 30060032 | Bachelor of Teaching Assistant/ 378386 | 33310903502 | G.O.(Ms) No.1210, ES & T Department, dated 11.06.1982 |
| 6. | Krishnagiri | GHSS Girls, Pochampalli | SB5K7 | 30050035 | Bachelor of Teaching Assistant/ 457985 | 33311211103 | G.O.(Ms) No.1413, Education Department, dated 20.08.1975 |
| 7. | Krishnagiri | GHSS Boys, Veppanapalli | SB5A7 | 30010022 | Bachelor of Teaching Assistant/ 409733 | 33311307604 | G.O.(Ms) No.785, Education Department, dated 05.04.1977 |
| 8. | Krishnagiri | GHSS, Enusonai | SB5M9 | 30030009 | Bachelor of Teaching Assistant/ 445357 | 33311404702 | G.O.(Ms) No.761, Education Department, dated 16.05.1970 |

ஜெ.குமரகுருபரன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.